மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற பாலத்தினுடைய விவரம் என்னிடத்திலே கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதைப் பார்த்தால், அது அநேகமாக ஊராட்சி ஒன்றியச் சாலையாகத்தான் இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஏனென்று சொன்னால், நம்முடைய நெடுஞ்சாலைத் துறையின்மூலமாகப் பராமரிக்கப்படுகிற சாலையாக இருந்தால், நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கப்படும் நிதியிலிருந்து நேரடியாக இதைச் செய்து விடலாம். ஊராட்சி ஒன்றியச் சாலையிலே பாலம் கட்ட வேண்டுமென்று சொன்னால், நபார்டு வங்கி போன்ற வங்கியினுடைய உதவியோடுதான் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, இப்போது உள்ளாட்சித் துறைமூலமாகவும் சாலைகள் அமைப்பதற்கும், பாலங்கள் அமைப்பதற்கும் அவற்றின் உதவியைக் கோரியிருக்கிறார்கள். அதன்மூலமாகவோ அல்லது நெடுஞ்சாலைத் துறையின்மூலமாகவோ அந்தப் பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

69—

பாதுகாப்பு இல்லங்கள்

***79656—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் மன வளர்ச்சி குன்றியோருக்கான பாதுகாப்பு இல்லங்கள் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2009 ஜூலை 1]

ஓமலூர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் மன வளர்ச்சி குன்றியோருக்கான பாதுகாப்பு இல்லங்கள் அமைப்பதற்கான திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, இருக்கையில் இல்லை; அவருக்கு மாற்றாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

திரு. வை. காவேரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர் தாலுகாவைத் தலைமையிடமாகக்கொண்ட பகுதியில் மன வளர்ச்சி குன்றிய சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அதிகமாக உள்ளார்கள். இவர்களுடைய பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் ஏழைகளாகவும், தினக் கூலிகளாகவும் உள்ளனர். மன நலம் குன்றியவர்கள் தொடர் வண்டி நிலையம், பேருந்து நிலையம் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் திரிந்துகொண்டிருக்கின்றனர். இவர்களால் போக்குவரத்திற்கு இடைஞ்சல் உள்ளது. அதே நேரத்தில், பயணிகளுக்கும் இடைஞ்சல் ஏற்படுகிறது. இந்நிலையில், இதுபோன்ற மன வளர்ச்சி குன்றியவர்களைத் தங்கள் குடும்பத்தில் வைத்துப் பராமரிக்க முடியாமல் பெரிதும் அவதிப்படுகிறார்கள். தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தி வரும் மன வளர்ச்சி குன்றியவர்களுக்கான பாதுகாப்பு இல்லங்களில் சேர்ப்பதால் அதிகப் பணம் தேவைப்படுவதோடு அல்லாமல், அவர்களை இல்லங்களுக்கு அழைத்துச் சென்று வருவதிலே போக்குவரத்திற்கும் சிரமம் உள்ளது. அதே நேரத்தில், கடந்த 20 ஆம் தேதிகூட புதுக்கோட்டை அருகிலே மேலச்சிவல்புரி என்ற இடத்தில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. காவேரி, கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

திரு. வை. காவேரி: மன நலம் குன்றிய ஒருவர்தான் 5 பேரைக் கொலை பண்ணியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, வேகமாகக் கேளுங்கள்.

திரு. வை. காவேரி: சைக்கோவாக மாறி, 5 பேரை, மன நலம் குன்றிய மருதுபாண்டி என்பவர் உருட்டுக் கட்டையால் அடித்துக் கொலை செய்திருக்கிறார். இந்த நிலை எல்லாம் மாற வேண்டுமென்றால், இதனைக் கருத்தில்கொண்டு, ஓமலூரில் அரசே மன வளர்ச்சி குன்றியோருக்கான பாதுகாப்பு இல்லம் அமைப்பதற்கு முன்வருமா எனத் தங்கள்வாயிலாக கேட்டு, அமர்கிறேன்.

[2009 ஜூலை 1

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் முழு நிதி உதவியோடு 14 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான 7 இல்லங்கள் தமிழகத்திலே நடைபெற்று வருகின்றன. அவற்றில், சேலம் மாவட்டத்தில் உள்ள 14 வயதுக்கு மேற்பட்டோரை தங்க வைத்து, அவர்களுக்குத் தொழிற்பயிற்சியும் அளிக்கலாம். அதில் அவர்களைச் சேர்த்துப் பயனடையலாம். அதுபோல 14 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கான தனிக் காப்பகம் சேலம் மாவட்டத்திலே அமையப்பெற்றுள்ளது. ஆகவே, பெண்களாக இருந்தால் அந்த இல்லத்திலே சேர்க்கலாம்.

அது மட்டுமல்லாமல், தொண்டு நிறுவனங்கள்மூலம் நடைபெறும் இல்லங்களில், சேலத்தில் இப்பொழுது புனித ஜூட்ஸ் நிறுவனம் என்ற ஒரு நிறுவனம் இருக்கிறது. அந்த நிறுவனத்திற்கும் அரசு கட்டடம், உணவீட்டுச் செலவினம் எல்லாம் வழங்கி வருகிறது. ஆகவே, 14 வயதிற்குக் கீழுள்ள மாணவர்கள் அதில் சேர்ந்து பயனடையலாம்.

அது மட்டுமல்லாமல், சிறு குழந்தைகள் ஆரம்ப காலப் பயிற்சி மையம், சிறு குழந்தைகளுக்கான சிறப்புப் பள்ளி, அதாவது சி.எஸ்.ஐ., பால ஞான இல்லம் என்ற ஒரு இல்லம் நம்முடைய முதலமைச்சர் அவர்களால் கடந்த ஆண்டில் தொடங்கப்பட்டு, நடைபெற்று வருகிறது. அதிலும் சிறு குழந்தைகளைச் சேர்த்துப் பயனடையலாம். ஆகவே, இந்த இல்லங்கள் இருக்கிற காரணத்தினால், நம்முடைய மாவட்ட நிருவாகத்தோடு இணைந்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல அதிகளவு மன வளர்ச்சி குன்றியோர் தெருவில் அலைகிறார்கள் என்று கூறியதால், அரசு இல்லங்களில் அவர்களைச் சேர்க்க சிறப்பு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

திரு. வை. காவேரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சிறார்கள் முதல் பெரியவர்கள் வரை மன வளர்ச்சி குன்றியவர்கள் எண்ணிக்கை எவ்வளவு என அரசினுடைய கணக்கீடு

2009 ஜூலை 1]

உள்ளதா? அவர்களுக்கு அரசு செய்து வரும் சலுகைகள் என்ன என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனிக் கேள்வி எழுப்பும்போது உரிய விவரங்களோடு பதில் சொல்ல இயலும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

70—

பால் குளிரூட்டும் நிலையம்

***56131**—திரு. த.அ. மேகநாதன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, ராயக்கோட்டை பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டினம் தொகுதி, ராயக்கோட்டை பகுதியில் போதிய பால் உற்பத்தி இல்லாத காரணத்தால் பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்குத் தற்போது வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன்.*

திரு. த.அ. மேகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாவட்ட அளவிலான குளிரூட்டு*